

# நேசரின் ஒளி
# Nesarin Oli


| மலர் 4<br>Volume 4 | இதழ் 12<br>Issue 12 | இலவசப்பிரதி<br>Free Distribution | ஜூலை 2017<br>July 2017 |
| --- | --- | --- | --- |




இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு
இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில்

## அன்பே பெரியது


Rev. V. இஸ்ரவேல் தேவதாசன்

# ஆசிரியர் உரை

**ஜுலை மாத வாக்குத்தத்தம் - அன்பே பெரியது**
**விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது.**
**இவைகளில் அன்பே பெரியது (1 கொரியந்தியர் 13:13)**

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவனுடைய பிள்ளைகளே,

இந்த நேசரின் ஒளி பத்திரிக்கையின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தர் ஜீவிக்கிற தேவனாய், நேற்றும் இன்றும் மாறாதவராய் இருக்கிறார். அவர் ஆரம்பித்த ஊழியம் தடைபடாது. இந்த பத்திரிக்கையை எழுத கிருபை செய்த தேவனுக்கு கோடாகோடி ஸ்தோத்திரம். ஒரு சில மாதங்கள் பல்வேறு காரணங்களால் தடைபட்ட இந்த பத்திரிகை ஊழியம் உங்கள் அனைவரின் ஜெபத்தினால் தடை நீக்கப்பட்டபடியால் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். இதற்காக ஜெபித்த எல்லா பிள்ளைகளையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

இந்த வருடத்தை ஆரம்பித்த நாம் 6 மாதங்களாக கடந்து ஜுலை மாதத்துக்குள் வர கர்த்தர் கிருபை கொடுத்தார். தேவன் தந்த ஊழியங்களை செய்ய கிருபை கொடுத்தார். இப்பொழுது ஊத்துக்குழி ஊழியங்களுக்காகவும், சத்யாநகரில் சகோதரன் வெங்கடேஷ் வீட்டில் நடக்கும் சிறுவர் ஊழியங்களுக்காகவும் ஊக்கமாக ஜெபிப்போம். நம் சபையில் நடக்கும் ஓய்வுநாள் ஆராதனை, அமாவாசை, பௌர்ணமி ஜெபம், ஆலோசனை ஜெபங்கள், ஆயத்த ஜெபம், மாதக்கடைசி நாள் முழு இரவு ஜெபமம், ஞாயிறு பள்ளி, சகோதரிகள் கூட்டம், வாலிபர் கூட்டம் மற்றும் வீடுகள் சந்திக்கும் ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம்.

நம் மத்தியில் உள்ள வாலிபப் பிள்ளைகள் இரட்சிப்பு அடைய, ஊழியம் செய்ய வாஞ்சையுள்ள எல்லா பிள்ளைகளும் ஆவியில் வளர ஜெபிப்போம். கடன் வேதனையில் உள்ளோரின் கடன் மாற, தொழில் புரிவோரின் தொழில்கள் ஆசிர்வதிக்கப்பட, திருமண வயதில் உள்ளோரின் திருமணம் நடைபெற, பிரிந்து இருக்கும் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழ, கர்ப்பத்தின் கனி இல்லாத பிள்ளைகளுக்கு கர்ப்பத்தின் கனி கிடைக்க, வியாதியாய் இருக்கும் பிள்ளைகள் பூரண விடுதலை பெற ஜெபியுங்கள்.

24 மணி நேரம் ஜெபத்தில் பெயர் கொடுத்தவர்கள் அந்நந்த நேரத்தில் விழித்திருந்து ஜெபிக்க, ஆலயத்தின் தேவைகள் சந்திக்கப்பட, சூனியம் மாந்திரீகத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பூரண விடுதலை பெற ஜெபிப்போம்.

நம் தேசத்தலைவர்களுக்காக, ஜனாதிபதி தேர்தலுக்காக ஜெபிப்போம். தேவன் நமக்கு பிரியமான பிள்ளைகளைக் கொண்டு ஆட்சி செய்யும்படியாக ஜெபியுங்கள். எல்லா கட்சித்தலைவர்களும் இணைந்து செயல்படும்படியாக, எல்லா மதத்தினர்கள் மத்தியிலும் நல்ல ஐக்கியம் உண்டாயிருக்கும்படி ஜெபிப்போம். எல்லாரிடமும் அன்பு செலுத்துவோம். எல்லா திருச்சபை போதகர்களும் ஒன்று சேர்ந்து அவருடைய ராஜ்யத்திற்கென்று மணவாட்டிகளை ஆயத்தப்படுத்த ஜெபிப்போம். அதிகாரிகளுக்காக நாம் இருக்கும் இடத்தின் ஜனங்களின் சமாதானத்திற்காக ஜெபிப்போம். நாட்கள் பொல்லாதவைகள் ஆனதால் காலத்தை பிரயோஜனப்படுத்துவோம். ஜெபிப்போம். சத்திய வேதத்தின்படி நடப்போம். பரிசுத்த ஆவியானவர் நடத்துதலுக்கு ஒப்புக்கொடுப்போம், தொடர்ந்து பத்திரிகை வெளிவர ஜெபியுங்கள்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
**Rev.** இஸ்ரவேல் தேவதாசன்



**Athma Nesar Prayer Fellowship**
**Worship Timing - Sunday at 9.30 a.m.**
Address : 7/160, Agaram Main Road,
Agaram Then, Chennai - 600 126.
Contact: +91 44 2229 4058
94440 30053 / 94440 30503

# அன்பு கூருங்கள்

2017 ஜூலை இதழ்



வேதம் சொல்கிறது, அவர் முந்தி நம்மிடம் அன்பு கூர்ந்ததினால் நாமும் அவரிடம் அன்பு கூறுகிறோம். 1 யோவான் 4:19-ல் வசனம் சொல்கிறது ஒவ்வொன்றுக்கும் ஒரு வல்லமை உண்டு. அதுபோல கிறிஸ்து இயேசுவுக்கும் பெரிய வல்லமை உண்டு. இயேசு கிறிஸ்துவின் அன்பே நம்மையும் அவரையும் ஒன்று சேர்க்கிறது. அதைத்தான் 2கொரிந்தியர் 5:14ல் பவுல் சொல்கிறார் கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. அன்பு இல்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பு கடவுள் அல்ல. கிறிஸ்துவின் மேன்மையான முதல் குணம் அன்பு. அவர் முன்பு நம்மிடம் அன்பு கூரியதால் ஆதாம், ஏவாள் உண்டாவதற்கு முன்னமே இந்த உலகத்தில் அவர் உண்டாக்கப்போகிற ஜனங்களுக்கு எல்லாவற்றையும் உண்டாக்கி ஆளுகை செய்யும்படியாக செய்தார். ஆனால் அவரால் உண்டாக்கப்பட்ட மனிதனோ அந்த அன்பை அறியவில்லை. கிறிஸ்துவின் அன்பை குறித்து அப்போஸ்தலனாகிய யோவான், யோவான் 3:16-ல் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்று கூறுகிறார். அவர் நம்மிடம் அன்பு கூர்ந்தபடியால் சிலுவையில் அநேக பாடுகள் சகித்தார். அந்த அன்பின் நிமித்தம் தான் "பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள" என்றார். இந்த அன்புதான் மேலான அன்பு. இதனை உணராதவர்கள்தான் அவரை சிலுவையில் அறைய கூக்குரலிட்டனர். தேவன் அன்பாகவே இருக்கிறார்.

## உள்ளே


01 தேவ செய்தி - **அன்பு கூருங்கள்**

- **Rev.** இஸ்ரவேல் தேவதாசன்

05 **அதிசயங்களைக் காணச்செய்வார்!**

- சகோதரி. மேபல் இஸ்ரவேல்

09 சாட்சிகள்

13 யூத் ஸ்பெஷல் - *அவர் விடுவிப்பார்!*

17 Blessing & Poverty - Pastor Benedict

21 Oh, Lord Our Strength

- Bro. Densingh Joshua Israel

26 *வேத வாசிப்பு பகுதி*

28 **தேவனின் அன்பு** - சகோதரி. சாந்தி டென்சிங்

30 **மருத்துவம்**

31 **சமையல்**



யோவான் 15:9-ல் பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாய் இருக்கிறேன். என்னுடைய அன்பில் நிலைத்து இருங்கள் என்றார் என்று இயேசுகிறிஸ்து சொல்கிறார். இந்த உலகமே அன்பில்தான் இருக்கிறது. இன்று அன்புக்காக ஏங்கும் ஏராளமான ஜனங்கள் உண்டு. இந்த அன்பு இயேசுகிறிஸ்துவிடம் உண்டு. இது மாறாதது. தியாகமான அன்பு. அவர் பட்டபாடுகள் எண்ணிப் பார்க்கும்போது எல்லா கல்மனமும் உடைந்துவிடும். கலா 2:20 நாம் மாம்சத்தில் பிழைத்து இருப்பதே எண்ணி அன்புகூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தில் பிழைத்திருக்கிறோம். லேவி 19:18ல் உன்னிடத்தில் நீ அன்புகூர்ந்து பிறனிடத்தில் அன்புகூறுவாயாக. நாம் மற்றவர்களிடம் அன்புகூறுகிறோமா? 1கொரி 14:1ல் அன்பை நாடுங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆவியின் கனிகளில் ஒன்று "அன்பு" அனபில்லாதவர்கள் ஒருபோதும் தன் சாரீரத்திலும் அன்பு கூறவும் இல்லை. ஆதலால் தேவனுடைய பிள்ளைகள் அறிவது கிறிஸ்துவை தன் இரட்சகராக தரித்து கொண்டவர்கள் எல்லாரிடமும் அன்பு செலுத்தவேண்டும். நாம் யார்யாரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்று பார்ப்போம்.

முதலில் நம்மை உண்டாக்கிய தேவனிடம் அன்பு செலுத்த வேண்டும். நாம் அன்பு செலுத்துவோமானால் அவர் சத்தியத்துக்க கீழ்படியவேண்டும். உபா 6:5 உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்பு கூற வேண்டும். நம்மை உண்டாக்கிய தேவனிடத்தில் அவ்வண்ணமாய் அன்பு கூறுகிறோமா? அப்படி அன்பு கூறுவோமெனில் தேவன்மேல் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அவரை நேசித்து, அவரை தேடுவதிலும், அவர் வசனத்தை தியானிப்பதிலும், அவர் பாதத்தில் அமருவதிலும், எல்லா துக்கம் சந்தோஷம் இவைகள் எல்லாவற்றிலும் அதிகமாக அன்பு கூருகிறவர்களாக காணப்படுவோம். தினந்தோறும் அவர் பாதபடியில் காலையும், மாலையும் துதிப்போம். அன்பு கூருகிறோமா? இயேசுகிறிஸ்து ஒரு சகோதரியை பார்த்து "மிகவும் அன்பு கூர்ந்தாளே" என்கிறார் லூக்கா7:44-46ல் ஒரு நாள் பரிசேயன் வீட்டில் இயேசுகிறிஸ்து பிரவேசித்தபோது பாவியான ஸ்திரி அங்கே பிரவேசித்து அவர் பாதத்தின் அருகே உட்கார்ந்து, அவருடைய பாதத்தை கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் அதை துடைத்து, அவருடைய பாதத்தில் பரிமளதைலத்தை பூசி, ஓயாமல் முத்தம் செய்தாள் என்றார். அதினால் அவள் பாவங்கள் மன்னிப்பட்டது. இவ்வளவாய் அன்பு கூர்ந்தாளே என்று சொல்லி உன்பாவம் மன்னிக்கப்பட்டது என்றாா. இவளே அன்பு கூர்ந்தாள் என்று சொல்லி சாட்சி பகர்ந்தார், வெளி 1:6 நம்மிடம் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினால் நம்முடைய பாவமற நம்மை கழுவி நம்மை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கின அவர் அன்பு மாசற்றது. 1 கொரி 13:1 நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தம் இடுகிற

வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன் என கூறப்பட்டுள்ளது. உங்களுக்கு ஆவியின் வரங்களையும், வல்லமைகளையும் கொடுத்து வழிநடத்துகிறாரே, அவரிடம் உங்கள் முழு இருதயம், ஆவி, ஆத்துமா சரீரத்திலும் முழுபெலத்துடன் அன்பு கூருகிறோமா? இல்லாவிட்டால் அன்பு கூரு.

இரண்டாவதாக, உலகத்தில் சொல்வார்கள் உன் தாயும், தகப்பனும் தெய்வம் என்று சொல்லுவார்கள். அநேகர் தங்கள் பெற்றோர்களை நேசிப்பதில்லை. வயது முதிர்ந்த பெற்றோர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிடுகிறார்கள். அநேகர் பட்டினியால் சாகடிக்கிறார்கள். தேவன் நமக்கு கொடுத்த கட்டளை எபேசியர் 6:2,3 உனக்கு நன்மை உண்டாயிருக்கும்படி, பூமியில் உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக. உபாகமம் 5:16 மோசே இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரையும் அழைத்து சொன்ன வார்த்தை, உனக்கு கொடுக்கும் தேசத்தில் உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, நீ நன்றாய் இருப்பதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கட்டளையிட்டபடியே உன் தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுவாயாக.

இதை வாசிக்கும் பிள்ளைகளே, உங்கள் தாய், தகப்பன் இடத்தை ஒருநாளும் மற்றவர்களால் நிரப்பமுடியாது. சற்று யோசித்து பாருங்கள். உன்னை சுமந்த தாயை, வளர்த்து முழுமையுமாக்கிய தாய் தகப்பனை யோசித்துபார். உனக்காக எவ்வளவு தியாகம் செய்து உன்னை வளர்த்தார்கள். அதை மறந்து போகாதே! மத் 15:4 உன் தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுவாயாக. தகப்பனையும் நிந்திக்கிறவன் கொலை செய்யப்படவேண்டும். எபேசி 6:1-3ன் படி, உங்கள் பெற்றாருக்கு கர்த்தருக்குள் கீழ்படியுங்கள். எல்லா ஆசீர்வாதங்களுக்கு மேலான ஆசீர்வாதம் வசிக்கும் இடம் ஆசீர்வதிக்கப்பட, சாபம் பின் தொடராதபடி இருக்க, உன் ஆயுசு நாட்கள் நீடித்திருக்க உன் பெற்றோருக்கு செய்யவேண்டிய கடமை செய்ய வேண்டும். அதுதான் கிறிஸ்தவனுக்கு தேவன் கொடுக்கும் கட்டளை. பெற்றோரை கனப்படுத்துவோம். அப்பொழுது உன் பிள்ளைகள் உங்களை கனம் பண்ணுவார்கள்.

மூன்றாவது, உங்கள் சொந்த மனைவியிடம் அன்பு கூருங்கள். ஏராளமான குடும்பங்களில் அநேக வருடங்களாக பேசாமல் இருக்கும் கணவன், மனைவி உண்டு. இதை வாசிக்கும் தேவபிள்ளையே, உன் மனைவியிடம் அன்பு கூருகிறாயா? உன் மனைவிக்கு செய்ய வேண்டிய காரியங்களை செய்கிறாயா? குடும்ப பிரிவினைக்கு காரணம் “அன்பு செலுத்தாததே”. எபேசி 5:23 புருஷர்களே, தங்கள் மனைவிகளை தங்கள் சொந்த சரீரமாக பாவித்து அன்பு கூருங்கள். எபேசி 5:25 புருஷர்களே, உங்கள் மனைவியிடம் அன்பு கூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்தார். அன்பு கூருவதினால் குடும்பங்களில் உள்ள எல்லா குற்றமும் அகன்றுபோகும். பாவம் உண்டாகதபடி சாத்தானுக்கு இடம் கொடுக்கமாட்டோம். கணவனும் மனைவியும் இணைந்து கர்த்தருக்கு வீட்டைக் கட்டும்படியாக ஒப்புக்கொடுங்கள். முப்புரிநூல் அறுந்துபோகாது.

ஆகவே, கர்த்தருக்குள் கணவன் மனைவி இணைந்து ஞானத்தினால் வீட்டைக்கட்டுங்கள். சகோதரிகளே, புத்தியுள்ள ஸ்திரி தன் வீட்டைக் கட்டுகிறாள். தன் கணவனுக்கு அலங்காரமாக, மதுரமாக இருக்கிறாள். எப்பொழுதும் கணவனை சந்தோஷப்படுத்துகிறோமா? பிரிவினை பிசாசுக்கு உரியது. அன்பு குறைந்தால் சோதனைக்காரன் பிரிவினையை உண்டாக்குகிறான். ஆதலால் எல்லாவிதமான தந்திரமான போராட்டம் மத்தியில் விடுதலை பெற ஒருவரில் ஒருவர் ஒரே மாம்சமானபடியால் சொந்த மாம்சத்தில் அன்பு கூருங்கள். ஒருபோதும் கர்த்தரின் ஆசீர்வாதம் தடைபடாது.

நான்காவதாக, உங்கள் சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள். 1 பேதுரு 2:17 எல்லாரையும் கனம்பண்ணுங்கள். சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள். சகோதர ஐக்கியம் மிக முக்கியமானது. அது எல்லா சூழ்நிலையில் நிலைத்து நிற்கும். இவ்வுலக வாழ்க்கையில் யார்யார் தன் சகோதர, சகோதரியிடம் அன்பு செலுத்துகிறார்களோ அது அவர்கள் வாழ்க்கையில் உலகத்தின் ஆசீர்வாதம் ஆகும். ஒரு குச்சியை எடுத்துக்கொள்ளுங்கள். அதை இலகுவாக முறித்துவிடலாம். இரண்டு, மூன்று குச்சுகளாக கட்டப்பட்டதாக இருந்தால் அதை முறிக்க முடியாது. காரணம் அன்பின் கயிறு இணைக்கப்பட்டு உள்ளது. ஆதலால் சகோதர ஐக்கியம் ஆபத்தில் உதவும். அந்த சகோதர அன்பு இல்லாதவன் தேவனை அறியாதவன். காயீனைப் போல என் சகோதரனுக்கு நான் காவலாளியோ? என்று சொல்லி ஒதுங்கிவிடுவான். ஒருவர் முகத்தில் ஒருவர் விழிப்பதே இல்லை. இங்கு தேவனிடத்தில் ஐக்கியமாக இருக்கிறவர்கள் சகோதரர்களிடத்தில் ஐக்கியமாக இருப்பார்கள். 1யோவான் 2:9,10 ஒளியில் இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனை பகைக்கிறவன் இதுவரை இருளில் இருக்கிறான். தன் சகோதரினிடம் அன்பு கூருகிறவன் ஒளியில் நிலைகொண்டு உள்ளான். அவனிடம் இடறல் இல்லை. இந்த உலகத்தில் உள்ள சகோதரினிடம் அன்பு கூருகிறவர்களே, நம் எல்லாருக்கும் மூத்த சகோதரன் இயேசுகிறிஸ்து உண்டு. அவரிடத்தில் அன்பு கூருவோம். அன்பு சகல கசப்பு, வைராக்கியம், கோபத்தை எடுத்துப்போடும். மத் 12:30 பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே, என் சகோதரனும் சகோதரியுமாய் இருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது. கண்ட சகோதாரனிடத்தில் அன்பு கூராதவன் காணாத தேவனிடம் அன்பு கூரவே முடியாது. இன்று ஏராளமான போராட்டம், கேஸ்கள் எல்லாம் சகோதர, சகோதரிகள் ஐக்கியம் இல்லாததே காரணம். ஆதலால் அன்பு செலுத்துங்கள். அன்பு சகல பாவத்தையும் மூடிவிடும்.

இன்னும் வேதத்தின்படி அன்பு செலுத்த வேண்டிய அநேக காரியம் உண்டு. பிள்ளைகள் கர்த்தரால் கொடுக்கப்பட்ட சுதந்தரம் என்று அறிந்து அவர்களில் அன்பு கூருங்கள். உங்கள் பிள்ளைகள் ஒலிவமரம் என்று சொல்லப்பட்டு உள்ளது. ஒலிவமரம் ஒருபோதும் அழியாதமரம். ஆதலால் உங்கள் பிள்ளைகளில் அன்பு கூருங்கள். உங்கள் சபை விசுவாசிகள், இயேசுவை விசுவாசிக்கிற அத்தனை விசுவாச குடும்பத்துடன் அன்பு பாராட்டுகிறவர்களாக காணப்பட வேண்டும். இவ்விதம் அன்பு செலுத்தவேண்டுமானால் அன்பு சகல பாவங்களையும் மூடும். உலகத்தில், தேசத்தில், சபையில், வீட்டில் அமைதல் சமாதானம் உண்டாய் இருக்கும். அவர் முந்தி நம்மிடம் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடம் அன்பு கூருகிறோம். அந்த அன்பு நம்மேல் ஊற்றப்படும் போது எரேமியா 31:3ன் படி அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகிக்கிறேன், ஆதலால் காருண்யத்தினால் உன்னை இழுத்துக்கொள்கிறேன் என்ற அன்புக்குள்ளாக கடந்துவருவோம். அந்த அன்பு அவருடைய சத்தியத்தையும் அவர் கல்வாரியில் சிந்தின இரத்தம், ஊற்றப்பட்ட பரிசுத்த ஆவியானவரையும் நமக்கு தருகிறார். அந்த அன்பில் நிலைத்திருப்போம். அவர் எப்பொழுதும் நம்மேல் அன்பாக இருக்கிறார்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! அந்த அன்பில் நிலைத்திருப்போம்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
**Rev.** இஸ்ரவேல் தேவதாசன்

# அதிசயங்களைக் காணச்செய்வார்!

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு உங்கள் யாவரையும் கிறிஸ்துவுக்குள் வாழ்த்துகிறேன். அநேக மாதங்களுக்கு பிறகு இந்த புத்தகத்தை எழுதும்படி தந்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கர்த்தர் அநேக அற்புதம் செய்து இருக்கிறார். அதில் ஒரு சின்ன அற்புதம் எனக்கு செய்து இருக்கிறார். ஒவ்வொருநாளும் அற்புதம் செய்தார். ஏழுநாளும் ஏழு அற்புதம் செய்து இருக்கிறார். ஏதேன் தோட்டத்தை உருவாக்கி அதில் ஆதாம் ஏவாள் இருவரை உருவாக்கி அற்புதம் செய்தார்.

ஆதாம் ஏவாள் ஏதேன் தோட்டத்தில் ஒரு பாவமும் அறியாது இருந்தார்கள். ஆனால் அவர்களை ஒரு சர்ப்பம் வஞ்சித்தது. அதே போல ஒரு பாவமும் இல்லாத குடும்ப வாழ்க்கையில் அநேக சர்ப்பங்கள் நம்மை வஞ்சிக்கிறதாகக் காணப்படுகிறது. அந்த பாவம் நம்மை படுகுழியில் தள்ளிவிடுகிறது. அண்ணன் தம்பி உறவு, அக்கா தங்கை உறவு, பிள்ளைகள் உறவு, சொந்தத்தால் ஏற்படுகிற உறவு, சொத்து உறவு, கொலை கொள்ளை, போலிஸ்டேஷன் இப்படியாக பல பிரிவுகள் உண்டாகி நமக்குள் இருக்கிற அன்பை கெடுத்துவிடுகிறது. ஆசீர்வாதத்தை கெடுத்துவிடுகிறது. இப்படிப்பட்ட பல அன்பினால் அதிசயம் கட்டப்படுகிறது.

ஆதாம் ஏவாளுடைய கண்கள் திறக்கப்பட்டது. அதன் மூலம் சந்ததி உருவானது. அதேப் போல நோவாவின் காலம் ஜலப்பிரளயம் உண்டானது. ஒருவராலும் செய்ய முடியாத அளவு பேழையை அவனுக்கு அளவு கொடுத்து அவனுக்கு செய்யும்படி செய்தார். ஆனால் இதில் தண்ணீர் போகாத அளவுக்கு செய்தார். ஆனால் நம்மால் ஒரு தீப்பெட்டி கப்பல் கூட செய்யமுடியாது.



தேவன் அவருக்கு எல்லாவிதமாக ஞானத்தையும் கொடுத்தார். ஒவ்வொரு மிருகங்களுக்கு ஜோடி ஜோடியாக வைக்கும்படி அளவு கொடுத்து இருந்தார். வெள்ளம் வரப்போகிறது வானத்தின்கீழே ஜீவசுவாசமுள்ள சகல மாம்சஜந்துக்களையும் அழிக்க நான் பூமியின் மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணுவேன். பூமியில் உள்ள யாவும் மாண்டுபோகும் என்றார். நோவா அவன் மனைவியும் உன் குமாரர்களும் பேழைக்குள் பிரவேசியுங்கள் என்றார். நோவா தேவன் சொன்னபடி செய்தான். அவன் ஆசீர்வதிக்கப்பட்டான்.

லோத்தின் மனைவி ஊரைவிட்டு போகும்படி (தப்பித்து கொள்ளும்படி) உரைக்கப்பட்டது. அப்பொழுது கர்த்தர் சோதோம் மேலும் கொமோராவின் மேலும் கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி அங்குள்ள சமபூமிகளை அழித்துப்போட்டார். குடிசைகளையும் பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார். அந்த மனைவியோ திரும்பி பார்த்ததினால் உப்புதூணாக ஆனாள். தேவனுடைய சத்த்ததிற்கு கீழ்படியாததினால் எல்லாம் மாறிவிட்டது. ஆதி 19:23,24,25,

ஆபிரகாமின் மகனான ஈசாக்கை மோரியா மலையின் மேல் கொண்டு போகும்படி தேவன் சொன்னதும் அதிகாலையிலே கழுதையின் மீது விறகு சேணங்கள் கட்டிக்கொண்டு வேலைக்காரரையும் கூட்டிக்கொண்டு சென்றான். மலையின் மேல் கொஞ்சதூரம் சென்றதும் வேலைக்காரரை இங்கே நில் நானும் பிள்ளையாண்டானும் மலையின் மேல் சென்று தொழுது கொண்டு வருகிறோம் என்று சென்றார்கள்.



அங்கு கட்டையும் நெருப்பும் இருப்பதைப் பார்த்த தன் கையில் ஆடு ஒன்றும் இல்லையே எப்படி பலியிடுவது கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் பின் கட்டையை அடுக்கி தன் மகனை கொஞ்சம் கூட சஞ்சலம் இல்லாமல் படுக்க வைத்தான். அதன் பின்பு கத்தியை எடுத்து பிள்ளையாண்டான் மேல் வெட்டுவதற்கு ஓங்கும் பொழுது கர்த்தருடைய சத்தம் உண்டாகி ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார். நீ உன் ஏகசுதன் என்றும் பாராமல் என் சத்த்ததிற்கு கீழ்படிந்தபடியால் பிள்ளையாண்டான் மீது கையை போடாதே. ஆடு முட்புதரில் இருக்கிறது பார் என்று சொல்லி திரும்பவும் ஆபிரகாமை கூப்பிட்டார். நீ உன் புத்திரன் என்று பாராது ஏக சுதன் என்று பாராது இருந்தபடியால் நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உன் சந்ததியை வானத்து நட்சத்திரம் போலவும் கடற்கரைமணலைப் போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன். சத்துருவின் வாசல்களை சுதந்திரமாக்கிகொள்ளுவாய் என்றார். இப்படியாக ஆபிரகாமின் சந்ததி பலுகிப்பெருகி உருவாயிற்று. ஆதி 22 : 1-12

ஆதி 21:19 ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து அப்பத்தையும் தண்ணீரையும் எடுத்து ஆகாருடைய தோளின் மேல் வைத்து பிள்ளையையும் ஒப்புக்கொடுத்து அவளை

அனுப்பிவிட்டான். அவள் புறப்பட்டுப்போய் பெயர்செபாவின் வனாந்திரத்தில் அலைந்து திரிந்தாள். துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்தபின் அவள் பிள்ளையை கீழே விட்டு பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேன் என்று எதிரே அம்பு பாயும் தூரத்தில் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள். தேவன் பிள்ளையின் அழுகையின் சத்தத்தை கேட்டார்.

ஆகாரே உனக்கு என்ன சம்பவித்தது பயப்படாதே! பிள்ளையிருக்கும் இடத்தில் தேவன் சத்தத்தை கேட்டார். நீ பிள்ளையை எடுத்து அவனை உன் கையினால் பிடித்துக்கொண்டுபோ அவனை பெரியஜாதியாக்குவேன் என்றார். ஆகாரின் கண்கள் திறக்கப்பட்டன.

தேவனோடு நெருங்கி வாழ்கின்ற யாவரையும் தேவன் பெரியஜாதியாக்கி அவர்களை ஆசீாவதிக்கிறார். ஆகவே நாம் தேவனோடு நெருங்கி ஜீவிப்போம். அப்பொழுது நமக்கு தேவையான எல்லாவிதமான ஆசீர்வாதம் உண்டு.

என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை எனறார் (யோபு 1:8) அவனை நிர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவினபோதிலும் அவன் இன்னும் தன் உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறான் என்றார்.

கர்த்தர் சாத்தானை நோக்கி இதோ உன் கையில் இருக்கிறான். அவன் பிராணனை தப்பவிடு. யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் வாதித்தான். அவன் ஓட்டை எடுத்து சுரண்டிக் கொண்டு இருந்தான். அவன் மனைவி அவனைப்பார்த்து நீர் இன்னும் உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள்.

கர்த்தர் நீதிமானின் வழியை அறிந்திருக்கிறார். துன்மார்க்கரின் வழியோ அழியும். யோபு கர்த்தருக்கு பிரதியுத்தரமாக நான் என்னை அவருவருத்து தூளிலும் சாம்பலிலும இருந்து மனஸ்தாபப்படுகிறேன்.



யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுவுக்கு முன் இருந்த எல்லாவற்ரறப் பார்க்கிலும் இரட்டைத்தனையாய்க் கர்த்தர் அவனுக்கு தந்தருளினார். அப்பொழுது அவனுடைய எல்லாச் சகோதரரும் சகோதரிகளும் அவனிடத்தில் வந்து அவனோடு போஜனம் பண்ணி கர்த்தர் அவன் மேல் வரப்பண்ணின தீங்கின் நிமித்தம் அவனுக்காக அங்லாய்த்து அவனுக்கு ஆறுதல் சொல்லி அவரவர் ஒவ்வொரு தங்க காசையும், அவரவர் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் கொடுத்தார்கள்.

யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை தேவன் ஆசீர்வதித்தார். பதினாயிரம் ஆடுகளும், ஆறாயிரம் ஒட்டகங்களும் அவனுக்கு ஆயிரம் ஏர்களும் ஆயிரம கழுதைகளும் அவனுக்கு உண்டாயின. ஏழு குமாரரும், மூன்று குமார்த்திகளும் அவனுக்கு பிறந்தார்கள். ஊருக்குள் எங்கும் யோபின் குமாரத்திகளைப்

போல அழகுள்ளவர்கள் எங்கும் காணப்படவில்லை. நாம் யாவரும் பிறருக்காக ஜெபிக்கிறவர்களாய் காணப்படவேண்டும். தேவனை தேடுகிற பிள்ளைகள் இரட்டத்தனையான ஆசீாவாதத்தை பெறுவார்கள். அதேப்போல் சாத்ராக்? மேஷாக், ஆபேத்நேகோ எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களை அக்னி சூளையில் போடுவதற்கு ஏழுமடங்கு தீ மூட்டி அவர்களை அதன் நடுவிலே போட்டார்கள். அந்த நெருப்பு அவர்களை சேதப்படுத்தவில்லை தூக்கிப்போட்டவர்கள் உடைய தான் எரியும் நிலை ஏற்பட்டது. நெருப்பின் நடுவிலே நாலாவது ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருந்தது. அவர்களை நெருப்பிலே போட்டும் எரியப்படவில்லை. ஆகையால் தேவனுடைய பிள்ளைகளே நாம் கடவுளுக்கு பயந்து அந்நிய தேவர்களுக்கு விலக்கி பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இப்படியாக அநேக அற்புதம் செய்தார்.

மரித்தோரை எழுப்பினார், பிசாசை துரத்தினார், பலவித நோய்களை குணமாக்கினார் மற்றும் பல அற்புதங்கள் செய்தார். இவையாவையும் பின்பற்றி நடக்கிறவர்களாக காணப்படவேண்டும். கிறிஸ்துவுக்குள் அன்பான பிள்ளைகளே மேலே உள்ள எல்லா காரியங்களையும் வாசித்து இருப்பீர்கள். நாம் உண்மையாய் தேவ பயத்தோடு இருக்கும்பொழுது கடவுள் நம் யாவரையும் ஆசீர்வதித்தார். ஆபிரகாம், நோவா இப்படி பல பரிசுத்தவான்கள் காணப்படும்பொழுது கடவுள் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராப. நாமும் அதுபோல் கிறிஸ்துவுக்குள் உண்மையாய் இருப்போம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகளை உண்மையாய் கீழ்படிதலோடு வளர்ப்போம். நாமும் கிறிஸ்துவுக்குள் இருக்கும்பொழுது கடவுள் நம்மை ஆசீர்வதித்து அதிசயங்களைக் காணச்செய்வார்!

இப்படிக்கு,
- சகோதரி. மேபல் இஸ்ரவேல்



# சாட்சிகள்

**தேவன் உங்களுக்குச் செய்த அற்புதங்களை சாட்சியாக எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்... அது அநேகருக்கு பிரயோஜனமாயிருக்கும்... ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்...**



## ஆசிர்வதித்து வழிநடத்தின தேவன்

**Sis.** ஜாஸ்லின், மாடம்பாக்கம், சென்னை

நாங்கள் இந்த சபைக்கு 11/2 வருடமாக வந்துகொண்டிருக்கிறோம். எங்களுடைய வாழ்க்கையில் பில்லிசூனியக் கட்டினால் பாதிக்கப்பட்டு, என்னுடைய கணவர் நடத்திக் கொண்டிருந்த IT- BPO பிசினஸ் இழந்து பல மாதங்களாக வேலை இல்லாமல் இங்கு வந்தோம். ஐயாவிடம், ஜெபிக்கும்போது "நீ பயப்படாதே! நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று கர்த்தர் பேசினார். அதன்படி போராட்டம், கடன்சுமை மத்தியிலும் கர்த்தர் அற்புதமாக நடத்தினார். "இரட்டிப்பான நன்மையைத் தருவேன்" என்று ஐயா மூலம் கர்த்தர் பேசினார். அதன்படி என் கணவருக்கு HCL கம்பெனியில் நல்ல வேலை கிடைத்தது. 9 மாதமாக வேலையில்லாத நிலையிலும் எந்தவொரு குறைவில்லாமல் தேவன் நடத்தினார். தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## வெட்கப்படாமல் பாதுகாத்த தேவன்

**Sis.** கிரேஸ், ரெட்ஹில்ஸ், சென்னை

எனது இடத்தை ஆக்கிரமிப்பு பண்ணி ரோடு போட்டுவிட்டார்கள். நான் அதிகாரிகளை பார்த்தேன். இது என் இடம் என தீர்ப்பு வந்துவிட்டது. மேலும் அந்த ரோடை இடிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது. ஆனால் இது இடிக்கப்படாமல் இருந்தது. மேலும் எங்களுக்கு விரோதமாக பில்லிசூனியம் செய்து அனுப்பினார்கள். நாங்கள் ஜெபித்துக்கொண்டே இருந்தோம். ஐயாவும் எங்கள் வீட்டிற்கு வந்து ஜெபித்தார்கள். ஜெபித்துவிட்டு "நீ கவலைப்படாதே, உனக்கு இது சாதகமாக அமையும், ஆண்டவர் செய்வார்" என்றார்கள். ஐயா சொன்ன இரண்டாம் நாளில், அந்த சிமெண்ட் ரோடு இரண்டாக பிளந்து விட்டது. அவர்கள் வந்து பார்த்துவிட்டு அரசாங்கம் சொல்லி, நாம் இந்த ரோடை இடிக்காத போது இது எப்படி நடந்தது என்று ஆச்சரியப்பட்டனர். நாங்கள், இது ஆண்டவர் செய்த அற்புதம் என்று நன்றி சொன்னோம். என் மகள் MBA படிக்கும் போது ஐயாவிடம் சொல்லி ஜெபித்தோம். ஆண்டவர் எல்லா பாடமும் பாஸ் பண்ண கிருபை செய்தார். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

ரோமர் 8:28

## ஆப்ரேஷன் இன்றி சுகம் கொடுத்த தேவன்

**Sis.** உமா, பெரம்பூர், சென்னை

எனக்கு திடீரென்று வயிற்று வலி வந்துவிட்டது. டாக்டரிடம் போனபோது அவர்கள் ஸ்கேன் பண்ணச் சொன்னார்கள். ஸ்கேன் ரிப்போர்ட்டில், சிறுநீரகத்தில் 2 கற்கள் இருக்கிறது. உடனே ஆப்ரேஷன் பண்ண வேண்டும் என்றார்கள். நான் Scan Report எடுத்துக்கொண்டு கெல்லீஸில் நடந்த கூட்டத்தில், ஐயாவிடம் கொடுத்து ஜெபித்தேன். ஐயா ஜெபித்து விட்டு "உனக்கு ஒன்றும் செய்யாது, ஆப்ரேஷன் தேவையில்லை" என்று கர்த்தர் பேசினார். நானும் தொடர்ந்து ஜெபித்தேன் பின் 15 நாட்கள் கழித்து டாக்டரிடம் சென்றபோது சோதித்து பார்த்துவிட்டு "சிறுநீரகத்தில் கல் இல்லை ஆப்பரேஷன் தேவையில்லை" என்று சொன்னார் அற்புதமாய் சுகம் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## கர்ப்பத்தின் கனியை தந்த தேவன்

**Sis.** ஜூலியற், ஆவடி

என்னுடைய இரண்டாவது மகளுக்கு 6 வருடமாக குழந்தை இல்லாமல் இருந்தது. நான் இங்கு வரும்போதெல்லாம் ஐயா மூலம் கர்த்தருடைய வார்த்தை "உன் மகளுக்கு நிச்சயமாக குழந்தையை கட்டளையிடுவேன், கவலைப்படாதே, கலங்காதே, சந்தோஷமாயிரு" என்று கர்த்தர் பேசினார். அதன்படியே என் மகளுக்கு கர்த்தர் ஒரு பெண் குழந்தையை தந்து ஆசிர்வதித்தார். அற்புதம் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.



## வாக்குதத்தத்தை நிறைவேற்றின தேவன்

**Sis.** சாந்தி, திருச்செந்தூர்

எங்களுக்கு திருமணம் ஆகி இரண்டு வருடங்களாக குழந்தை இல்லை. திருச்செந்தூரில் நடக்கும் ஜெபத்தில் கலந்து கொண்டு, ஐயாவிடம் ஜெபித்தோம். "உபவாசம் இருந்து ஜெபி, நான் அற்புதம் செய்வேன்" என்று கர்த்தர் பேசினார். அதுபோல நாங்களும் ஜெபித்தோம். அந்த வருடமே கர்த்தர் ஒரு ஆண் குழந்தை தந்து ஆசீர்வதித்தார். அற்புதம் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## மனவாஞ்சையை நிறைவேற்றின தேவன்

**Sis.** ஜாஸ்மின், ஆதம்பாக்கம்

என் கணவர் காவல்துறையில் பணிபுரிந்து வருகிறார். காவல்துறை குடியிருப்பில் வீடு கிடைக்க ஜெபித்து வந்தோம். ஒரு வருடத்திற்கு மேலாகியும் கிடைக்கவில்லை. நவம்பர் 2016 அமாவாசை ஜெபத்தில் சாட்சி சொல்லுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். 2017 ஜனவரி 1 -ஆம் தேதி ஐயாவிடம் ஜெபிக்கும் போது "நீங்கள் வெகு நாட்களாக ஜெபித்த காரியம் இந்த வருடம் நிறைவேறும்" என்று கர்த்தர் பேசினார். அதுபோலவே, பிப்ரவரி 23ம் தேதி வீடு கிடைக்க கர்த்தர் கிருபை செய்தார். அற்புதம் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## ஜெயம் கொடுத்த தேவன்

**Bro.** சாம், படப்பை

4 வருடமாக இந்த ஜெபத்திற்கு வருகிறோம். இங்கு வந்ததிலிருந்து கர்த்தர் அநேக நன்மைகளை எங்கள் குடும்பத்தில் செய்துள்ளார். என்னுடைய பத்தாம் வகுப்பு படிப்பில் ஐயா மூலம் கர்த்தருடைய வார்த்தை "உனக்கு விரோதமாக உள்ள எல்லாவற்றையும் நான் உடைப்பேன், உன்னை வாலாக்காமல் தலையாக்குவேன" என்று கர்த்தர் பேசினார். அதன்படி ஒன்றுமில்லாத நிலையில் இருந்த என்னை கர்த்தர் ஆசீர்வதித்து 440 மதிபெண் எடுக்க கிருபை செய்தார். XII படிப்பிலும் தோற்றுவிடுவேனோ என்ற நிலையில் இருந்தேன். ஐயா எனக்காக தொடர்ந்து ஜெபித்தார்கள். அனைத்து பாடத்திலும் ஜெயம் எடுக்க கர்த்தர் கிருபை செய்தார். அற்புதம் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## திருமண தடையை மாற்றின தேவன்

**Sis.** மேரி, நெடுங்குன்றம்

எனது சகோதரிக்கு திருமணம் ஆகாமல் தடையாகவே இருந்தது. இதற்காக ஜெபிக்கும்படி சபைக்கு வந்தேன். ஐயா மூலம் கர்த்தருடைய வார்த்தை "தடையை மாற்றுவேன், சத்தருக்களுக்கு முன்பாக ஒரு பந்தியை ஆயத்தப்படுத்துவேன்" என்று கர்த்தர் பேசினார். அதன்படியே கர்த்தர் என் சகோதரியின் திருமணத்தை அற்புதமாக நடத்தினார். சத்துருக்களுக்கு முன் வெட்கப்படாதபடி பாதுகாத்தார். அற்புதம் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.



## ஜீவனைக் கூட்டிக்கொடுத்த தேவன்

**Bro.** ஜோசப் மகிமைதாஸ், கருநீலம்

நான் இங்கு வந்ததிலிருந்து எவ்வளவோ நன்மைகளை பெற்றுள்ளேன். 2016 ஜூலை மாத பௌர்ணமி அன்று ஜெபத்திற்கு வந்தேன். ஐயா ஜெபித்துவிட்டு "உனக்கு ஆயுசு நாட்களை கூட்டி தந்திருக்கிறேன்" என்று வெளிப்படுத்தினார். பின் MIOT Hospital சென்றேன். டாக்டர் பரிசோதித்துவிட்டு 90% இரத்தக்குழாய அடைப்புள்ளது. ஆப்ரேஷன் பண்ண வேண்டும் என்று சொன்னார்கள். Operation முன்பு ஐயாவிடம் போனில் ஜெபித்தேன். ஏசாயா 41:10 வாக்குத்தத்தமாக கொடுத்தார். எனக்காக தனிப்பட்ட விதத்திலும், சபையிலும் அனைவரும் ஜெபித்தீர்கள். 4 மணி நேரம் ஆப்ஷேன் நடந்தது. கர்த்தர் மறுஜீவனை எனக்கு தந்தார். ஜீவனைக் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## இம்மட்டும் வழிநடத்தின தேவன்

**Sis.** ராணி, ஆவடி

நான் 10 வருடங்களாக இங்கு வந்து கொண்டிருக்கிறேன் எனது 3 பிள்ளைகளுடன் எனது கணவர் என்னை விட்டுச் சென்றுவிட்டார். பிள்ளைகளை வைத்து காப்பாற்ற முடியாமல் கஷ்டப்பட்டேன் சாவு தான் முடிவு என்ற சூழலில் இருந்தேன். ஒரு சகோதரி ஒரு முறை இங்கு வா என்று எனக்கு பஸ் டிக்கெட் போட்டு கூட்டிவந்தார்கள். இங்கு வந்ததும், ஐயா ஜெபிக்கும்போது கர்த்தர் "என் நிலைமையை அப்படியே வெளிப்படுத்தினார். 3 பிள்ளைகளை வைத்து துணையில்லாமல் தனியாக கஷ்டப்படவேண்டும் என்று செய்யப்பட்ட கிரியை என்று வெளிப்படுத்தினார்". எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. தொடர்ந்து ஜெபத்திற்கு வர கிருபை செய்தார். 3 பிள்ளைகளையும் படிக்கவைத்து, திருமணம் நடத்தி எல்லாவற்றையும் நன்மையாய் நடத்தினார். ஒவ்வொரு காரியத்திற்கும் ஐயாவிடம் ஜெபிக்கும்போது கர்த்தர் காரியத்தை வெளிப்படுத்தி அற்பதமாய் இம்மட்டும் நடத்திவந்துள்ளார். இம்மட்டும் நடத்தின தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## வெளிப்படுத்தி பூரணவிடுதலை கொடுத்த தேவன்

**Bro.** ராஜேஷ், திருச்சி

பள்ளிப்படிப்பை முடித்து, கல்லூரி படிப்பில் இடம் கிடைக்காமல் இருந்தது. ஐயாவிடம் சொல்லி ஜெபித்து வந்தோம். தேவன் அற்புதம் செய்து கல்லூரியில் சேர்ந்து படிக்க கிருபை செய்தார். நான் முதுகுவலியால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். ஐயா ஜெபித்து கொடுத்த ஜெப எண்ணெயை இயேசுவின் இரத்தம் என்று விசுவாசத்துடன் பூசி வந்தேன். என்னுடைய பரிட்சை நேரத்தில் முதுகு வலியினால் இரண்டாவது தேர்வை சரிவர எழுத முடியவில்லை. ஐயா ஜெபித்துவிட்டு "நீ நல்ல மதிப்பெண்களை பெறுவாய்" என்று சொன்னார். அதன்படி அந்த பாடத்தில் அதிக மதிப்பெண்களை பெற கர்த்தர் கிருபை செய்தார். மேலும் அமாவாசை ஜெபத்தில் ஐயா மூலம் கர்த்தருடைய வார்த்தை "ஒருவரின் முதுகுவலியை நான் நீக்கி, முழுவதுமாக விடுதலை தருகிறேன" என்று கர்த்தர் வெளிப்படுத்தினார். அன்றிலிருந்து கர்த்தர் எனக்கு முதுகுவலியிலிருந்து பூரணவிடுதலை தந்துள்ளார். சுகம் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## பெலவீனக்கட்டிலிருந்து விடுதலைக் கொடுத்த தேவன்

**Bro.** மாற்கு முத்து, கொளத்தூர்

எனது சரீர முழுவதும் பயங்கர வலி, வேதனையில் கஷ்டப்பட்டு வந்தேன். விசுவாசத்தோடு ஐயா கொடுத்த இயேசுவின் இரத்தத்தை பூசிவந்தேன். ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். ஐயா மூலம் கர்த்தருடைய வார்த்தை "மரணக்கட்டை உடைத்துள்ளேன் என்று பேசினார்". அதன்படி வேலைக்கு போகமுடியாமல் கஷ்டபட்ட எனக்கு கர்த்தர் சரீரத்தில் பூரணவிடுதலை கொடுத்து வேலை செய்ய கிருபை செய்துள்ளார். பைபிள் படிக்க முடியாமல், ஜெபிக்க முடியாமல் இருந்த என்னை கர்த்தர் விடுவித்து, ஜெபிக்க, வேதம் வாசிக்க கிருபை செய்தார். எனக்கு விடுதலை கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்! ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.



**"உங்கள் அன்பு மாயமற்றதாய் இருப்பதாக, தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள். சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கு ஒருவர் முந்திக் கொள்ளுங்கள். அசதியாயிராமல் ஜாக்கிரதையாய் இருங்கள்"**

**ரோம. 12:9–11**

## யூத் ஸ்பெஷல்

# அவர் விடுவிப்பார்!



**ஆபத்து, கலக்கம், துயரம், பிரச்சனை, குழப்பம், குறைகள், சவால்கள், சாபம், பாவம்....இவைகளிலிருந்து உங்களுக்கு விடுதலை!**

அன்பான வாலிப சகோதர, சகோதரிகளுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம். இன்றைய உலகம் ஒவ்வொருநாளும் புது, புது பிரச்சனைகளை நமக்கு முன்வைக்கிறது. கல்வி தேர்வு முறைகளில் மாற்றங்கள் படிப்பவர்களுக்கு சவால்களை கூட்டுகிறது. வரி செலுத்தும் முறைகளில் மாற்றங்கள் வியாபாரிகளையும், சாமானியர்களையும் பணத்தைக் குறித்து மிரள வைக்கிறது. கலாச்சார, சமூக பழக்க வழக்கங்களின் மாற்றங்கள் பரிசுத்த வாழ்விற்கு போட்டியாக இருக்கின்றன. மனிதர்கள் சுயநலவாதிகளாக மாறிக்கொண்டிருப்பதால் பிரச்சனையே இல்லாத உறவுகளை காண்பது அரிதாயிருக்கிறது. எங்கு பார்த்தாலும் புதிய புதிய நோய்கள், பெலவீனங்கள் குடும்பங்களை அசைக்கின்றனர். இப்படி நாம் ஏதாவது பிரச்சனைகளின் மத்தியில்தான் வாழ்க்கையை நடத்தவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். எப்பக்கமும் இப்படி நம்மை கஷ்டப்படுத்தும் சூழ்நிலைகள் இருக்கும்போது நம்மில் சிலர் தைரியமாக நம்முடைய சுயமுயற்சியில், அவைகளை மேற்கொள்ள நினைத்து, முயன்று, தோற்றுபோய் அதே நிலையில் இருக்கிறோம். சிலர் வெளியேற வழி அறியாமல் கலங்கி நிற்கிறோம். எப்படிப்பட்ட சவாலான சூழ்நிலையில் நீங்கள் இருந்தாலும் நீங்களே அதிசயப்படும் விதமாக விடுதலையை கொடுக்க ஒருவர் உண்டு. அவரை தங்கள் ஆபத்திலே கூப்பிட்டாள். யாராக இருந்தாலும் அவர்கள் விடுதலையும், மகிழ்ச்சியும், ஆசீர்வாதமும், கனமும் பெற்றார்கள். ஆம்! நமக்கு விடுதலையை கொடுப்பவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே! சோர்ந்துபோயிருக்கும் உங்களைப் பார்த்து அவர் சொல்லுகிறார், “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன” மத்11:28 யார் யாரெல்லாம் விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் இயேசுவிடம் வந்தார்களோ, அவர்கள் எல்லாருடைய பிரச்சனைகளிலிருந்தும் அவர் அவர்களை விடுவித்தார். விசுவாசிக்கிற உங்களையும் அப்படியே அவர் விடுவிப்பார்.



## அழுகையை அறிகிறார்



தனிமையில் உங்கள் பிரசச்னைகளைக் குறித்து அழுது கொண்டிருக்கிறீர்ளா? கலங்காதிருங்கள்! இயேசு உங்களுக்கு உதவி செய்வார். இப்படித்தான் வேதத்தில் ஆகார் என்ற பெண்மனி தன் உறவுகளால் கைவிடப்பட்டு, தன் ஓரே மகளை காப்பாற்ற உணவோ, பணமோ, ஏன் தண்ணீர்கூட இல்லாமல் வானந்திரத்திலே அலைந்து திரிந்து இனி என் மகன் சாவதை பார்க்கமுடியாது என்று சொல்லி தனியே நின்று சத்தமிட்டு அழுதாள். அந்த அழுகையின் சத்தத்தையும், பிள்ளையின் அழுகுரல் சத்தத்தையும் கர்த்தர் கேட்டார். கேட்ட அவர், ஆகாரோடு பேசினார். பயப்படாதே! பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார் ஆதி 21:17 என்று சொல்லி அவளுக்கும், அவனுக்கும் அப்பொழுது தேவையான தண்ணீரைக் கொடுத்து, பின்பு வருங்காலங்களுக்கு வேண்டிய ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தமாக கொடுத்தார். ஆ! எவ்வளவு கரிசனையான கடவுள் நமக்கிருக்கிறார்.

மாறாத இந்த தேவன் இன்று உங்கள் கண்ணீரையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். அழுவதைத் தவிர என்னால் வேறு எதுவும் செய்ய முடியவில்லையே உறவுகளால் கைவிடப்பட்டு எனக்கு எங்கிருந்தாவது உதவி வராதா, என தவித்து நிற்கும் வாலிப சகோதரனே, சகோதரியே, இன்று உங்களுக்கு உதவி தேவனிடத்திலிருந்து வருகிறது. அவர் உங்களிடம் பேசுவார், வாக்குத்தத்தங்களை கொடுப்பார், உங்களை ஆசீர்வதிப்பார். நீர் என்னைக் காண்கிற தேவன் என்ற விசுவாசத்தோடு அவர் உதவிக்கு காத்திருங்கள் ஆதி 16:13 உங்கள் கண்ணீரை துடைத்து இனி அழாதபடி உங்கள் கண்ணீரை நிறுத்துவார். ஆசீர்வாதத்தோடு முன்னோக்கி நடக்க செய்வார். ஆம், அவர் விடுவிப்பார்!

## அழுத்தங்களை அகற்றுவார்

நீங்கள் இன்று எப்பக்கத்திலும் உங்களை பிரச்சனைகள் நெருக்குகிற நிலையில் இருப்பீர்களானால், இயேசு உங்கள் மத்தியில் வந்து, உங்களோடு கூட இருந்து, அந்த அழுத்தமான சூழ்நிலைகளை அற்புதமாக நீங்கள் மேற்கொள்ளும்படி செய்வார். உங்களைப் பார்த்து உலக மக்கள் ஆச்சரியப்படும் விதமாக, இயேசு கிறிஸ்து உங்களை வெற்றியாளராக மாற்றுவார். இப்படித்தான், நம் தேவன்மேல் அதிக விசுவாசமும், நம்பிக்கையும் கொண்டிருந்த 3 வாலிபர்களுக்கு தேவன் அற்புதம் செய்தார். சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோ என்ற இம்மூவர், ராஜா அமைத்த பொற்சிலையை வணங்க மறுத்ததால் ஏழுமடங்கு சூடாக்கப்பட்ட அக்கினி சூளையிலே போடப்பட வேண்டும் என்று தீர்ப்பானது (தானி 3) ஆனால் அவர்கள் முழுமையாக தேவசித்தத்ததை நம்பி தேவனைக்குறித்து வைராக்கியமாக இருந்ததால், அவர்கள் அக்கினி சூளையில் இருக்கும்போது, அவரும் நான்காவது மனிதராக அவர்களுடன் அந்த அக்கினியில் நடந்து, அவர்களையும் பாதுகாத்தார். புறஜாதியான ராஜா இதைக் கண்டு, இவ்விதமாய், இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான் தானி 3:29.

அன்பான வாலிபர்களே, நீங்கள் சந்திக்கும் சவால்களை தேவன் சாதனையாக மாற்றுவார். அக்கிப்போன்ற பிரச்சனைகளின் மத்தியில், உங்களை எப்பக்கத்திலும் அழுத்துகிற உங்கள் பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும், "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்;, திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பெலப்படுத்தி, உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன" ஏசா 41:10 என்று தேவன் சொல்லுகிறார். இயேசு கிறிஸ்துவின்மேல் உங்களுக்கிருக்கும் நம்பிக்கையை விட்டுவிடாதிருங்கள். அவர் எப்பொழுதும் உங்களோடுகூட இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள். உங்களை சுற்றிலும் இருக்கிற குடும்பத்தினர், நண்பர்கள், பகைவர்கள். அயலகத்தார், மேலதிகாரிகள் உங்கள் வாழ்வில் தேவன் இருப்பதைக் காண்பார்கள். அவர் அற்புதமாக உங்களை அழுத்தும் எல்லா பிரச்சனைகளிலிருந்தும், பாவங்களிலிருந்தும், நீங்கள் விடுதலையாவதை பார்ப்பார்கள். அவர்களும் உங்களோடுகூட தேவனை மகிமைப்படுத்தும் நிலை ஏற்படும். ஆம்! அவர் உங்களை விடுவிப்பார்.

## அலைச்சல்களை மாற்றுவார்

ஒரு பிரச்சனையிலிருந்து இப்பொழுதுதான் மீண்டு வந்திருப்போம். பார்த்தால், மற்றொரு குழப்பத்தை எதிர்க்கொள்ள வேண்டிய நிலை. இப்படி ஒன்றன் பின் ஒன்றாக சவால்களையும், கஷடங்களையும், பிரச்சனைகளையும், சோதனைகளையும், நாம் சந்திக்க நேரிடும்போது, எப்படி மனமுடைந்து விடுகிறோம். வாழ்க்கையில் அங்கும்இங்குமாக அலைகழிக்கப்படுகிற நேரங்களில நாம் அனுபவிக்கும் துயரத்தை விவரிக்க முடியாதே. நாம் வாழந்துவிடுவோமா? அல்லது இப்படியே அழிந்துவிடுவோமா? என்ற கேள்விகள் நமக்கு வரலாம். இயேசுவின் சீஷருக்குகூட இப்படிப்பட்ட கேள்விகள் ஓர் நாள் இரவு வந்தது. இயேசு படகில் இல்லாமல், அக்கரைக்கு போகும்படி அவர்களுக்கு கட்டளை கொடுத்தார். நடுக்கடலில் எதிர்காற்றினால் படகு அலைகழிக்கப்பட்டது (மத் 14:2-33) ஆனால் இயேசு கடல்மேல் நடந்துவந்து படகில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது. இதேபோல் மற்றொரு நாளில் இயேசு சீஷரோடு படகில் இருந்தார். ஆனால் அவர் நித்திரையாயிருந்தார். படவு நிரம்பத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதினது. அப்பொழுது சீஷர்கள் இயேசுவை எழுப்பி அங்கலாய்த்து புலம்பினார்கள் (மாற்கு 4:35-41). இயேசு ஒரு வார்த்தை சொல்ல கடல் அமைதலாயிற்று. அவர் தமது சீஷரிடம், "ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று" என்றார்.

இன்று நீங்கள் இயேசுவை இன்னும் முழுமையாக பின்பற்றாதவராய் இருக்கலாம் அல்லது அனுதினமும் அவர் அன்பை ருசித்தவராக இருக்கலாம். எப்படிப்பட்டவராக நீங்கள் இருந்தாலும் வாழ்க்கையில் இங்குஅங்குமாக பிரச்சனைகளினால் அலைகழிக்கப்படும்போது நாம் பயந்து, திணறி, செய்வதறியாது திகைத்து, புலம்பலோடு தேவனை நோக்கி பதறி ஜெபிக்கிறோம். அப்படிப்பட்ட நம்மைப் பார்த்து இயேசு, "ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ...என்று கேட்கிறார். இயேசு கிறிஸ்து நம்மோடுகூட இருப்பதால், எப்படிப்பட்ட அலைகழிக்கிற சூழலிலும் இயேசு என்னோடு இருப்பதால், நாம் பயமின்றி பத்திரமாக இலக்கை அடைவோம். சிறந்த ஒரு வாழ்க்கை வாழ்வோம். எந்த ஒரு அலைச்சலும் என்னை மேற்கொள்ளாது என்ற நம்பிக்கையோடு இருக்கலாம். எவ்வாறு அன்று காற்றையும், கடலையும் இயேசு அமைதிப்படுத்தினாரோ, அவ்வாறே உங்கள் அங்கலாய்ப்புகளை தேவன் அமைதிப்படுத்துவார்.



அவர் ஒரு வார்த்தை சொல்ல எல்லாம் மாறிப்போகும். நீங்கள் நல்ல வாழ்க்கை வாழவேண்டும் என்று விரும்புகிற அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

சகோதரனே, சகோதரியே, வாலிப வயதில் நீங்கள் சந்திக்கும் பிரச்சனைகள் அதிகமே! முயன்று முன்னேற வேண்டும் என்ற ஆசை ஒரு பக்கம், குடும்ப பொறுப்புகளின் அழுத்தம் ஒரு பக்கம், செய்யும் தவறுகளை, பாவங்களை விட்டுவிட போராட்டம், மற்றொரு பக்கம் எப்பொழுதும் சோதனைகளை கொடுக்கும் உலகம் இன்னொரு பக்கம், இவைகளின் மத்தியில் பரிசுத்தமாய் வாழவேண்டுமே என்ற விருப்பம் என எப்படிப்பட்ட கலக்கமான நிலையில் இருந்தாலும், இயேசு உங்களை விடுவிப்பார் என்பதை அறியுங்கள். அவர் எப்பொழுதும் உங்களோடுகூட இருக்கிறார். யாரும் காணாத உங்கள் கண்ணீரை அவர் பார்த்துக்கொண்டிருக்கிறார்; உங்கள் மனதின் அழுத்தங்களை அவர் பார்க்கிறார்; நீங்கள் அலைகழிக்கப்படுவதை பார்க்கிறார்; நீங்கள் அவர்மீது நம்பிக்கை வைத்திருப்பதை பார்க்கிறார்; உங்கள் பயங்கள் அவருக்கு தெரியும்; அவரை தொடர்ந்து விசுவாசியுங்கள்! அவர் விடுவிப்பார்!

ஆகாரின் அழுகுரல் அவரிடம் எட்டினது போல,

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் அக்னி சூளையை அவர் கண்டது போல,

சீஷர்களின் புலம்பலை அவர் கேட்டது போல,

இன்று உங்களின் நிலையை அவர் அறிவார்!

இயேசு உங்களை விடுவிப்பார்!

**"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச்செய்வேன்;**
**ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்"**
(சங் 91:15)

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள,

சகோதரி. லிண்டா ராஜாசிங்

# BLESSING AND POVERTY



*I Timothy 6:17-19 :Charge them that are rich in this world, that they be not high-minded, nor trust in uncertain riches, but in the living God, who giveth us richly all things to enjoy; That they do good, that they be rich in good works, ready to distribute, willing to communicate; Laying up in store for themselves a good foundation against the time to come, that they may lay hold on eternal life.*

In these end times there's an unveiling taking place in every nation on earth. The reality of BLESSING is becoming clearer every day. All those who believe, witness and experience the manifestations of God's prosperity in every areas of life. In spite of economy crisis and money problems, ATM'S (All Time Money) having turned to STM's (Some Time Money), Government's plans to stop money laundering and fake currency has not shaken them with the blessings of the Lord. These steps are the preparations for a greater Blessing. Ep 1:4 The wealth that is going to be transferred is into the hands of God's children, the ones who are righteous and holy before Him in love. But in our hearts rises a question, why would we need all this wealth, property, goods, and also people transferred? First of all we should understand this transfer is from the clutches of the devil to the ones to whom it belongs to. It's the devil who took the wealth by force when Adam sinned. So, when Adam lost everything he had to work, sweat for material needs. But now, Praise God! Jesus defeated the devil who took everything not only spiritual but also material that was given to Adam & which he lost. (Mathew 15:24) Jesus came not only to seek and save that was lost, but (1John 3:8) also to destroy the works of the devil and save us from our (Heb 2:14) sin and death (Ep 1:13) and fill us with Holy Spirit so we walk holy & righteous, serving & ministering to him and to the people. He said I have Come that you may have 'zoa' life which is abundant life, that means nothing missing, nothing broken. But what Jesus said is not most say that were anointed. When Jesus said that He is anointed, the first thing he said is to preach the gospel to the poor in spirit - poor mentally and poor physically (means also poor materially) because the enemy the devil had stolen it. Jesus preached I have come to give back all to you and more, that is to make us rich in God.

By forgiving us of all sins and restoringus unto God, filled us with His Holy Spirit making rich spiritually, mentally by revelation knowledge about Who God is and who we are and renewing our mind and rich physically by healing our body as we believe in His healing power and richmaterially by blessing us giving back all that the devil stole, from what God had given to man. For those who don't believe ordoes not know or don't want material blessing ,it is held back by the devil while all the time we pray bless me materially, Lord bless me materially. While all the time the Lord keeps saying that He has blessed us with all heavenly blessings which means all blessings from Him but if we don't believe it and think it means something else and pray , we will still be poor and have just enough for yourself, sounds selfish! Thinking about only our need and our family and children's need and may be left over little to others, with nothing extra left over to give to the poor who is poorer.

